

# சீறத்துன்னபி ﷺ

## நாள் 9

# இன்றைய தலைப்புகள்

- பகுதி 1: முதலில் இஸ்லாத்தைத் தழுவியவர்கள்
- பகுதி 2: அபூபக்கர் அஸ்-சித்திக் (ரலி)
- பகுதி 3: ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தைத் தழுவிய உயர்குடும்பத்து மக்கள்:

  ஸஅத் இப்னு அபீவக்காஸ் (ரலி)

  உஸ்மான் பின் அஃப்பான் (ரலி)

  ஜுபைர் இப்னு அல்-அவ்வாம் (ரலி)

  அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரலி)

- பகுதி 4: வேலைக்கார மற்றும் அடிமை வர்க்கத்திலிருந்து ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தைத் தழுவியவர்கள்

## பகுதி 1: முதலில் இஸ்லாத்தைத் தழுவியவர்கள்

- இரண்டாவது வஹீ வந்தபின், நபி (ஸல்) அவர்கள் தனது குடும்பத்தினருக்கும், நெருங்கிய நண்பர்களுக்கும் இஸ்லாத்தைப் போதித்தார்கள்.

- முதன்முதலாக இஸ்லாத்தைத் தழுவியவர் நபி (ஸல்) அவர்களின் மனைவி கதீஜா (ரலி) ஆவார்.

- முதல் வஹீ வந்த உடனேயே அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள். மேலும், அவர்கள் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் நபி (ஸல்) அவர்களுக்கு ஆதரவளித்தார்கள்.

- இரண்டாவதாக இஸ்லாத்தைத் தழுவியவர் வரகா இப்னு நவ்ஃபல் ஆவார்.

- அவர் நபி (ஸல்) அவர்களுக்கு அனுப்பப்பட்ட வஹீயை நம்பி, ஏற்றுக்கொண்டார். மேலும், அவர் ஷஹாதாவை (கலிமாவை) கூறவில்லையென்றாலும், அவர்களை ஒரு நபியாகவும் ஏற்றுக்கொண்டார். முதல் வஹீ வந்த சில நாட்களில் அவர் காலமானார்.

- அடுத்ததாக இஸ்லாத்தைத் தழுவியவர் யார் என்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது. சிலர் அபூபக்கர் (ரலி) என்றும், சிலர் அலீ இப்னு அபிதாலிப் (ரலி) என்றும், சிலர் ஜைது இப்னு ஹாரிதா (ரலி) என்றும் கூறுகிறார்கள்.

- அறிஞர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் ஒருமித்த கருத்தை இவ்வாறாக முன்வைத்துள்ளனர்: இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட முதல் பெண்மணி கதீஜா (ரலி); இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட முதல் சுதந்திர மனிதர் அபூபக்கர் (ரலி); இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட முதல் சிறுவர் அலீ (ரலி); மேலும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட முதல் விடுதலையான அடிமை ஜைது (ரலி) ஆவார்.

- அப்போது அலீ இப்னு அபிதாலிப் (ரலி) அவர்களுக்கு 10 வயது இருக்கும்; நபி (ஸல்) அவர்களின் வீட்டில்தான் வசித்து வந்தார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் கதீஜா (ரலி) அவர்களை மணந்தபோது, தனது பெரிய தந்தை அபிதாலிபிடம், அவருக்குப் பிறந்த மகன் அலீயை தான் வளர்த்துவர கேட்டுக்கொண்டார்கள். அதற்குக் காரணம் அபிதாலிப் மிகவும் ஏழ்மையானவராக இருந்தார். அபிதாலிபும் இதற்கு ஒப்புக்கொண்டதால், நபி

(ஸல்) அவர்களின் வீட்டில் அலீ (ரலி) வளர்ந்து வந்தார்கள்.

## பகுதி 2: அபூபக்கர் அஸ்-சித்திக் (ரலி)

- அபூபக்கர் அஸ்-சித்திக் (ரலி) சிறு வயதிலிருந்தே நபி (ஸல்) அவர்களின் நெருங்கிய நண்பராக இருந்தார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், ''அல்லாஹ் என்னை ஒரு நெருங்கிய நண்பராக (கலீல்) தேர்ந்தெடுத்துள்ளான், எனவே கலீலைத் தேர்ந்தெடுக்க எனக்கு அனுமதி இல்லை. ஆனால் நான் அனுமதிக்கப்பட்டிருந்தால், எனது நெருங்கிய நண்பராக அபூபக்கரைத் தேர்ந்தெடுத்திருப்பேன்'' – (ஸஹீஹ் முஸ்லிம்).

- ஒருமுறை அபூபக்கர் (ரலி) அவர்களுக்கும், உமர் (ரலி) அவர்களுக்கும் வாக்குவாதம் ஏற்பட்ட போது, நபி (ஸல்) அவர்கள் உமர் (ரலி) அவர்களிடம் இவ்வாறு கூறினார்கள்: '' அல்லாஹ் என்னை இந்த மார்க்கத்துடன் அனுப்பியபோது, நீங்கள் அனைவரும் என்னைப் பொய்யர் என்று குற்றம் சாட்டினீர்கள். ஆனால், அபூபக்கர் மட்டுமே என்னை நம்பினார். அதனால், என் தோழரை தொந்தரவு செய்யாமல் விடமாட்டீரா?'' – (ஸஹீஹ் புகாரீ).

- மற்றொரு சந்தர்ப்பத்தில், நபி (ஸல்) கூறினார்கள்: ''நான் இஸ்லாத்திற்கு அழைத்த எந்த ஒரு மனிதரும், இஸ்லாத்தைத் தழுவுவதற்கு முன் சில சந்தேகங்களுடனேயே இருந்தனர். அபூபக்கர் மட்டுமே நான் இஸ்லாத்தை போதித்தவுடன், தயங்காமல் உடனே ஏற்றுக்கொண்டார்''.

- நாம் இதற்குமுன்பு குர்ஆனில் பெயர் குறிப்பிடப்பட்ட ஒரே ஸஹாபா ஜைது (ரலி) என்று குறிப்பிட்டிருந்தோம்.

- குர்ஆனில் நேரடியாக பெயர் இல்லாமல் குறிப்பிடப்பட்ட ஒரே ஒரு நபித்தோழர் அபூபக்கர் (ரலி) மட்டுமே. – (அத்-தௌபா 9:40). மதீனாவிற்கு செல்லும் ஹிஜ்ரத் பயணத்தில் தௌர் குகையில் மறைந்திருந்ததை கூறும்போது, அல்லாஹ் அபூபக்கர் (ரலி) அவர்களை நபியின் தோழர் என்று குறிப்பிடுகிறான்.

- ஆரம்பகாலத்தில் இஸ்லாத்தை தழுவிய அடுத்த மக்கள் குழு அனைவரும் அபூபக்கர் (ரலி) அவர்கள் கைகளில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்கள். இவர்கள் ஒவ்வொருவரும் இஸ்லாத்தின் சிறப்பு மிக்க வாழ்க்கையை

நடத்தினர். மேலும் அவர்கள் ஒவ்வொருவரும் சரித்திர கதாநாயகர்களாக உருவாகினர். அதில் நால்வர்களைப் பற்றி இங்கு விரிவாக காண்போம்.

## பகுதி 3: ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தைத் தழுவிய உயர்குடும்பத்து மக்கள்

### ஸஅத் இப்னு அபீவக்காஸ் (ரலி)

- ஸஅத் இப்னு அபீவக்காஸ் (ரலி) இஸ்லாத்தைத் தழுவியபோது அவருக்கு சுமார் 16 வயது இருக்கும்.

- அவர் குரைஷிகளின் முக்கிய குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரது தாயார் ஒரு சிலை வழிபாட்டாளர். ஸஅத் (ரலி) தனது தாயை மிகவும் நேசிப்பவராக இருந்தார்.

- அவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதை அறிந்த அவரது தாயார், முதலில் அவரை பயமுறுத்தினார்; பின்னர் அவரை சித்திரவதை செய்தார். அது பலனளிக்காதபோது, உணர்ச்சிபொங்க பேசி அவரை மிரட்டினார்.

- ஸஅத் மீண்டும் சிலை வணக்கத்திற்கு திரும்பும்வரை சாப்பிடுவதையும், குடிப்பதையும் நிறுத்துவதாக அவர் அறிவித்தார்.



- நாட்கள் கடந்தன. அவர் மிக பலவீனமடைந்தார். ஸஅத் தனது தாயாரை தனது அன்பால் சமாதானப்படுத்த, முடிந்தவரை முயன்றார்.

- அவர் இறக்கும் தருவாயை நெருங்கியபோது, இறுதியாக ஸஅத் கூறினார்: ‘‘எனதருமை அன்னையே! நான் இஸ்லாத்தை ஒருபோதும் கைவிடமாட்டேன்! உனக்கு ஆயிரம் உயிர்கள் இரு ந்து, அதை நீ ஒன்றன் பின் ஒன்றாக இழந்தாலும், இஸ்லாத்தில் இருக்கும் என் நம்பிக்கையை ஒருபோதும் கைவிடமாட்டேன்!

- இந்த மன உறுதியை தன் மகனிடம் கண்ட தாய், வேறு வழியில்லாமல் தனது விரதத்தை முறித்துவிட்டு சாப்பிட ஆரம்பித்தார்.

- இந்த நிகழ்விற்குப் பதிலளிக்கும் விதமாக அல்லாஹ் குர்ஆனின் வசனங்களை வெளிப்படுத்தினான்: ‘‘உங்களுக்குத் தெரியாத ஷிர்க்கை அவர்கள் (உங்கள் பெற்றோர்கள்) உங்களைப் பின்பற்றுமாறு வற்புறுத்தினால், அவர்களுக்குக் கீழ்ப்படியாதீர்கள்; எனினும் இவ்வுலகில் நீங்கள் அவர்களை அன்பாக நடத்த வேண்டும். (யாவற்றிலும்) என்னையே நோக்கி நிற்போரின் வழியைப் பின்பற்றுங்கள்’’ – (லுக்மான் 31:15).

## உஸ்மான் பின் அஃப்பான் (ரலி)

- உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு சுமார் 5 வயது இளையவர் மற்றும் அவருக்கு நெருங்கிய நண்பராகவும் இருந்தார்கள். மேலும், அவர்கள் குரைஷிகளின் மிக முக்கியமான குடும்பத்தைச் சேர்ந்தவராகவும், மிகுந்த செல்வந்தராகவும் இருந்தார்கள்.

- அவர்கள் நல்ல குணத்துடன், மிகுந்த கூச்சம், பணிவு, மற்றவர்களுக்கு உதவும் பண்பு ஆகியவற்றைக் கொண்டிருந்தார்கள்.

- இவையனைத்தும் சேர்ந்து குரைஷிகளின் முக்கிய பிரமுகர்களில் ஒருவராகவும் இருந்ததால், அவர்கள் மக்கள் அனைவராலும் பெரிதும் நேசிக்கப்பட்டார்கள்.

- குரைஷிகளின் வீடுகளில் தாய்மார்கள், குழந்தைகளை தூங்க வைக்கும் போது பாடும் பாடல்களில் ஒன்று: ‘‘அர்–ரஹ்மான் மீது சத்தியமாக! உன் மீதான எனது அன்பு, உஸ்மான் மீது குரைஷிகள் கொண்ட அன்பைப் போன்றது’’.

- இத்தகைய நற்பண்புகளுடைய உஸ்மான் (ரலி) அவர்களிடம் அபூபக்கர் (ரலி) அவர்கள் ஓரிறைச் செய்தியைக் கூறி, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம்

அழைத்துச் சென்று, பின் குர்ஆன் வசனங்கள் சிலவற்றைக் கேட்டவுடன், அவர்கள் உடனே இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள்.

- அவர்கள் துன் நூரைன் - (இரண்டு ஒளிகள் உடையவர்) என்று அழைக்கப்பட்டார்கள்.

- நபி (ஸல்) அவர்களின் மகளான ருக்கையாவை மணமுடித்து, ருக்கையாவின் மரணத்திற்குப் பின்பு, நபி (ஸல்) அவர்களின் மற்றொரு மகளான உம்மு குல்தூமைத் திருமணம் செய்து கொண்டதால், அவர்களுக்கு இந்தப் பட்டம் வந்தது.

## ஜுபைர் இப்னு அல்-அவ்வாம் (ரலி)

- ஜுபைர் இப்னு அல்-அவ்வாம் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் மாமி மகன் ஆவார்கள். (அவரது தாயார் சஃபியா. இவர் அப்துல் முத்தலிப்பின் மகளாவார்).

- ஜுபைர் (ரலி) அவர்களைப் பற்றி நபி (ஸல்) இவ்வாறு கூறினார்கள்: ‘‘ஒவ்வொரு நபிக்கும் சீடர்கள் இருக்கிறார்கள். என்னுடைய சீடர் ஜுபைர் இப்னு அல்-அவ்வாம்’’.

## அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரலி)

- அபூபக்கர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் செய்தியுடன் அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரலி) அவர்களிடம் வந்தபோது, இவருக்கு 30 வயது இருக்கும். இவர் வியாபாரத்தில் புத்திசாலியாகவும், நேர்மையாகவும் தனக்கென ஒரு பெயரையும் பெற்றிருந்தார்.

- இந்த பிரபல்யமான ஸஹாபி மதீனாவுக்கு குடிபெயர்ந்தபோது, குறைஷிகள் அவரிடமிருந்து எல்லாவற்றையும் அபகரித்துக் கொண்டனர். இதனால் அவர் ஆடைகளை மட்டும் எடுத்துக் கொண்டு ஒரு பிச்சைக்காரனைப் போல மதீனாவுக்கு வந்தார்.

- அவரது நிலையைப் பார்த்த மதீனா அன்சாரிகளில் ஒருவர் அவரிடம், ‘‘எனக்கு இரண்டு தோட்டங்கள் உள்ளன; அதில் ஒன்றை நீங்கள் எடுத்துக்கொள்ளலாம். எனக்கு இரண்டு மனைவிகள் உள்ளனர்; நான் உங்களுக்காக ஒருவரை விவாகரத்து செய்து உங்களுக்கு மணமுடித்து

வைக்கிறேன். என் வீட்டில் இரண்டு மாடிகள் உள்ளன; நீங்கள் ஒன்றைத் தேர்வு செய்து அதில் தங்கிக்கொள்ளலாம் ‘‘ என்று கூறினார்.



- அதை அப்துர் ரஹ்மான் (ரலி) பணிவாக மறுத்துவிட்டு, ‘‘அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக! எனக்கு வியாபார சந்தைக்கு வழிக்காட்டுங்கள்’’, என்று கேட்டுக்கொண்டார். சிறிது நேரத்தில் அவர் சந்தையில் வியாபாரம் செய்யத் தொடங்கிவிட்டார். மிகக் குறுகியகாலத்தில் அவர் பெரும் வணிகராகி, செல்வந்தரானார்.

## பகுதி 4: வேலைக்கார மற்றும் அடிமை வர்க்கத்திலிருந்து ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தைத் தழுவியவர்கள்

- அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) – இஸ்லாத்தைத் தழுவிய ஒரு சாதாரண வகுப்பைச் சேர்ந்த முதல் முக்கிய நபர் ஆவார். அவர் ஒரு அடிமை அல்ல; ஆனால், வேலைக்கார வர்க்கத்தைச் சேர்ந்தவர்.

- அவரது தொழில் ஆடு மேய்ப்பதாகும். ஒரு நாள் அவர் தனது ஆட்டு மந்தையுடன் இருந்தபோது, நபி (ஸல்) அவர்களும், அபூபக்கர் (ரலி) அவர்களும் அங்கு வந்தார்கள்.

- அவர்கள் அப்துல்லாஹ்விடம் ஆட்டு மந்தையிலிருந்து குடிக்க கொஞ்சம் பால் கொடுக்கச் சொன்னார்கள். அதற்கு அவர் அந்த செம்மறி ஆடுகள் தனக்குச் சொந்தமானது அல்ல என்பதால் தன்னால் அதை செய்ய முடியாது என்று பதில் கூறினார்.



- நபி (ஸல்) அவர்கள் அதற்கு, ‘‘பரவாயில்லை! பால் கொடுப்பதை நிறுத்திய வயதான ஆடு ஒன்றை எங்களுக்குக் காட்டுங்கள்’’ எனக் கூறினார்கள். இப்னு மஸ்ஊத் ஒரு ஆட்டைச் சுட்டிக் காட்டினார். நபி (ஸல்) அவர்கள் அந்த ஆட்டின் அருகில் சென்று துஆ செய்தார்கள். பின்பு அதன் மடி நிரம்பி வழிந்தது. அதிலிருந்து நபி (ஸல்) அவர்களும், அபூபக்கர் (ரலி) அவர்களும் வயிறு நிரம்ப பால் குடித்தார்கள்.

- இதனைக் கண்ட அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் மிகுந்த ஆச்சரியம் அடைந்து, ‘அவர்கள் யார்?’, என்று கேட்டார். அதற்கு அபூபக்கர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தைப் பற்றி விளக்கியபோது, அவர் அந்த இடத்திலேயே இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்.

- நபி (ஸல்) அவர்கள் ஒருமுறை இப்னு மஸ்ஊத் (ரலி) பற்றிக் கூறும்பொழுது, ‘‘நீங்கள் குர்ஆனை வஹீயின் மூலம் வந்ததைப் போலவே சரியாக ஓதவேண்டும் என்று விரும்பினால், இப்னு மஸ்ஊத் ஓதுவது போல் குர்ஆனை ஓதுங்கள்’’ என்று கூறினார்கள்.

- இப்னு மஸ்ஊத் (ரலி) ஒருமுறை கூறியது: ‘‘நான் 70க்கும் மேற்பட்ட ஸூராக்களை (குர்ஆனின் மூன்றில் இரண்டு பகுதி நேரடியாக நபி (ஸல்) அவர்கள் கூறியபோது கற்றுக்கொண்டேன்’’.

- மேலே கூறப்பட்டவர்கள் அனைவரும் ஆரம்பகாலத்தில் இஸ்லாத்தைத் தழுவியவர்கள். அடுத்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பெரும்பாலோர் மக்காவிலிருந்த அடிமை வகுப்பைச் சேர்ந்தவர்கள்.